# சைப்பிரஸ் ஜனுதிபதி மக்காரியோஸ் காலமானுர்

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆடி 20 ஷஃபா: 18 இதழ் 174

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-8-77

யாழ். ரேட்டரி
காணிவல்
சென். பற்றிக்ஸ்கல்லூரி
மைதானம்
30-7-77—10-8-77
▪ திகிலூட்டும் நெருப்பில் 'பெண்ணின்பயங்கரபாய்ச்சல். ▪ 'பப்பட்' காட்சி ▪ கரகாட்டம். ▪ மாயா ஜாலவித்தைகள். பொப் நிகழ்ச்சிகள்.
தினமும் நடைபெறும்.
6764

நிக்கோஸியா, ஆக. 3

சைப்பிரஸ் குடியரசின் ஜனுதிபதி அதிமேற்றிராணியார் மக்காரியோஸ் இன்று மாரடைப்பால் காலமானுர்.

நேற்றுமாலை நிக்கோஸியாவில் திடீரென மாரடைப்பால் பாதிக்கப்பட்ட ஜனுதிபதி இன்று காலை மரணமானுர்.

இறக்கும்போது இவருக்கு வயது 64.

சைப்பிரஸ் சுதந்திரப் போராட்டங்களில் தீவிரபங்கு செலுத்திய ஜனுதிபதி மக்காரியோஸ், 1960ம் ஆண்டு சைப்பிரஸ் குடியரசு உருவான போது அதன் ஜனுதிபதியாகப் பதவியேற்ருர். பின்னர் 73ம் ஆண்டு அங்கு நடைபெற்ற புரட்சிச் சதியின்பின் நாட்டை

6-ம் பக்கம் பார்க்க



# பேரவைக் கூட்டம் இன்று ஆரம்பம்!

## புதிய சபாநாயகர் இன்று தெரிவு

(கொழும்பு)

**இலங்கை குடியரசு இரண்டாவது தேசிய பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. கூட்டத்தொடரை ஜனுதிபதி திரு வில்லியம் கோபல்லாவ ஆரம்பித்து வைப்பார்.**

இதுவரை ஆட்சி புரிந்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் தோல்வியைத் தழுவிய பின் பெரும்பான்மை பலத்துடன் (139 ஸ்தானங்களுடன்) ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் இன்று முற்பகல் 9-45 மணிக்கு ஆரம்பமாகும் அதன் பின்னர் தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத்தொடரை ஜனுதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ முற்பகல் 10-30 மணிக்கு பேரவை மண்டபத்தில் ஆரம்பித்து வைப்பார்.

சகல உறுப்பினர்களும் முற்பகல் 9-30 மணிக்கு பேரவைக்கு வந்து சேரவேண்டும் என்று சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9-40 மணியில் இருந்து 5 நிமிடங்களுக்கு அடிக்கப்படும் மணியோசையுடன் பேரவை நடைமுறைகள் ஆரம்பமாகும் பொழுது உறுப்பினர்கள் பேரவையில் கூடுவர்.

சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பேரவையின் விருப்புக்கு இணங்க அவர் தம்மை முன்மொழிந்தவராலும் வழிமொழிந்தவராலும் சபாநாயகரது ஆசனத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

தமது ஆசனத்தையடைந்து அவர் அதில் அமர்வதற்கு முன்னர் தம்மைத் தெரிவு செய்தமைக்காக மிகவும் சுருக்கமாக நன்றி தெரிவிப்பார்.

(6ம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு கூடிய கூட்டணியின் முக்கிய முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு வந்த சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்கள் நேற்றிரவு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைச் செயலகத்தில் கூடி முக்கியமான விஷயங்கள் பற்றி ஆலோசனை நடத்தினர்.

மட்டக்களப்பு முதல் அங்கத்தவர் திரு. செ. இராசதுரை தவிர தமிழர் விடுதலைக் கூட்டணியின் சகல எம்.பி.க்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ். நகரிலிருந்து 5-30க்கு வரவேண்டிய விமானம், எதிர்பாராதவிதமாகஇரவு7-45க்கே கொழும்பு வந்ததால் இக் கூட்டம் காலம் தாழ்த்தியே- நேற்றிரவு 9-20க்கே - ஆரம்ப

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்னைக்கு பிரதமரின் பரிகாரம்

கொழும்பு, புதன்

தமிழ்மக்களின் பிரச்னைகளை தீர்ப்பது தொடர்பான சில ஆலோசனைகளை பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்தனு தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்களிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

மொழிப்பிரச்னை மட்டுமல்ல

(6ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரினுர்

புதுடில்லி, ஆக. 3

முன்னுள் காங்கிரஸ் தலைதர் திரு. பருவா இன்று ஜம்மு-காஷ்மீர் நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் இவர் பத்திரிக்கை ஒன்றிற்குக் கருத்து வெளியிட்டிருந்தார் என்பதே இவர்மீதான குற்றச்சாட்டாகும். (உ)

## கூப்பன் புள்ளிஇல்லாமலே துணிகள் விநியோகம்

கொழும்பு, புதன்

கூப்பன் புள்ளிகள் இல்லாமலே துணிகளை கூட்டுறவுக் கடைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கடைகளிலும் விநியோகிக்கும் நடைமுறை இன்றுமுதல் அரசாங்கத்தால் அமுல் செய்யப்பட்டது.

சலுசலவினுல் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களிலும் கூட்டுறவுக் கடைகளிலும் சீத்தைத் துணிகளையும் உள்ளூர் உற்பத்தித்துணிகளையும் ஒருயார் 7 ரூபா 50 சதவீதம் இந்நடைமுறை மூலம் பெற்றுக் கொள்ள முடியும் சலுசலா புதிய வர்த்தக நிலையங்களையும் பதிவு செய்துவருகிறது. (உ)

## சுரங்க விபத்து 150 பேர் பலி

லண்டன் ஆக. 3

மொஸாம்பிக்கில் ஏற்பட்ட சுரங்க விபத்தொன்றில் 150 பேர் பலியானுர்கள்.

இச்சுரங்கத்தில் வேலை செய்த தொழிலாளர்களே இறந்ததாகவும் 9 வெளிநாட்டவர்களும் இதில் அடங்குவர் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (கு)

# "வெளியே போய்க் கத்துங்கள்" -சபாநாயகர் வெளிநடப்புசெய்தனர் தி.மு.க உறுப்பினர்கள்!

சென்னை, ஆக 3

இன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் எதிர்பாராத ஓரிரு சம்பவங்களும், நிதி அமைச்சரின் லெஜிடர் வரிச்சலுகைகளும் இடம்பெற்றன. இவற்றுடன் எதிர்க்கட்சியினரின் ஒரு கோரிக்கைக்கு முதலமைச்சர் பச்சை விளக்கு காட்டியது சிகரமாகஅமைந்திருந்தது.

இன்று நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்துக்கு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மூன்றுதினங்களின்பின்னர் வந்திருந்தார். 77 78ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதம் இன்று ஆருவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

### தி. மு. க.வின் வெளிநடப்பு

நிதிஅமைச்சர் திரு. நாஞ்சில் மனேகரன் நிதி நிலைமை பற்றி பேசிக்கொண்டிருக்கையில், ஒருசட்டத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் மீது சபாநாயகர் திரு. முனு ஆதி கண்டனம் தெரிவித்தார். தம்பிடம் அனுமதி பெருமல் ஆசனங்களிலிருந்துகொண்டே இந்த உறுப்பினர்கள் பேசுவதைக் கண்டித்த சபாநாயகர், நிதிஅமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் போது இடையே குறுக்கிட்டுப் பேசுவது நல்லதல்ல. என்று கூறி, 'வெளியே போய்க் கத்துங்கள்'' என்று சற்றுக் கடுமையாகவே பேசினுர்.

இதனைத்தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணுநிதி, சபாநாயகரின் இந்த வார்த்தைகுறித்து தாம் மிகவும் வருந்துவதாகக்கூறி, சபையைவிட்டு வெளியேறினர். அவரைத் தொடர்ந்து தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

சபாநாயகர் வருத்தம்

இதன்பின்னர் சபாநாயகர் தாம் வெளியிட்ட கருத்துக் குறித்து வருத்தம் தெரிவித்தார். யாரையும் புண்படுத்தக்கூடிய வகையில் தாம் கருத்து வெளியிடவில்லையென்றும் இப்படியான 'நிகழ்ச்சி' இனிமேல் நடக்காமல் தாம் பார்த்துக்கொள்வதாகவும் கூறினுர். ஆனுலும் தி.மு.க. அங்கத்தவர்கள் உடன் சபைக்கு வர

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

எந்த இடத்தில் தனிப்பட்ட மனிதனின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவோ, அந்த இடத்திற்குப் பெயர்தான் நாடு.

- மாஜினி

ஈழநாடு
THE EELANAADU

# தேசிய அரசுப் பேரவை கூடுகிறது

இலங்கைக் குடியரசின் இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடரை மாண்புமிகு ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ அவர்கள் சம்பிரதாய முறைப்படி இன்று காலை ஆரம்பித்து வைத்து புதிய அரசின் கொள்கைத் திட்டத்தை அறிவிக்க விருக்கின்றார்.

அபரிமிதமான பெரும்பான்மையோடு பதவிக்கு வந்துள்ள ஐக்கியதேசியக் கட்சி அரசு இந்த நிகழ்ச்சியை ஒரு வெற்றிவிழா போன்று பெரிய எடுப்பில் கோலாகலம் ஒன்றும் நடத்தாமல் மிக எளிமையாக நடத்தவிருப்பது எதிர்காலத்தில் அது மேற்கொள்ள விருக்கும் செயல்திட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாக இருக்கும்.

பிரதம மந்திரியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டவுடனேயே வெற்றிக்களிப்பில் அவசரப்பட்டு நாட்டுமக்களுக்குச் செய்திகள் வெளியிடுவதைத் தவிர்த்துக்கொண்ட புதிய பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் கொழும்பிலிருந்து கண்டிக்குச் சென்று தலதாமாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து முதன்முதலாக நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். நிதானமும், விவேகமும், அரசியல் ஞானமும் தொனிப்பதாக அமைந்த அவ்வுரை ஏற்கனவே நாட்டுமக்கள் மத்தியில் ஓர் நம்பிக்கைச் சுடரினை ஏற்றிவைத்துள்ளது. இந்த நம்பிக்கைச்சுடரை மேலும் தூண்டிவிட்டு வளர்ப்பதாக இனி அவர் எடுக்கும் நடவடிக்கைகள் அமையவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

புதிய சபையில் பழைய முகங்கள் சிலவும் புதிய முகங்கள் பலவும் காணப்படுகின்றன.

பழைய பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அமர்ந்த இடத்தில் புதிய பிரதமர் திரு. ஜேர். ஜயவர்த்தன அமரும் அதேசமயம் முன்னர் ஜயவர்த்தன அமர்ந்த இடத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அமரும் வாய்ப்பினை இந்தநாட்டுமக்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

ஆளும்கட்சி எதிர்க்கட்சியாவதும், எதிர்க்கட்சி ஆட்சியில் அமர்வதும் ஜனநாயகநாடுகளில் ஏற்படும் சாதாரண நிகழ்ச்சிகள் தாம். ஆனால் இன்று நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை ஏனைய நாடுகளில் சாதாரணமாக நிகழமுடியாதவொன்று என்பதில் சந்தேகமில்லை.

ஆட்சியிலிருந்த கட்சி படுதோல்வியைத் தழுவிக்கொண்ட அதேவேளையில் எதிர்க்கட்சி அபரிமிதமான பெரும்பான்மையோடு பதவியில் அமர்த்தப்பட்டிருப்பது ஒன்றும்புதுமையல்ல. தேசிய சிறுபான்மை இனம்ஒன்றின் பிரதிநிதிகளையே பெரும்பான்மையாகக்கொண்ட பிரதான எதிர்க்கட்சி ஒன்று உருவாக்கப்பட்டிருப்பது இந்தநாட்டின் அரசியலில் ஒரு திருப்புமுனை என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

எனவே தேசிய அரசுப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்து செயலாற்றவிருக்கும் தமிழர்விடுதலைக்கூட்டணிப் பிரதிநிதிகளின் நடவடிக்கைகளை நாட்டுமக்கள் மாத்திரமல்ல இந்தநாட்டு நலனில் அக்கறைகொண்ட பிறநாடுகளும்கூட உன்னிப்பாகக்கவனிப்பார்கள் என்பது நிச்சயம்.

கூட்டணியினர் எந்தக் கொள்கையை முன்வைத்து தமிழ்மக்களின் ஆதரவைப் பெற்றுப் பேரவைக்குச் சென்றார்களோ அந்தக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு ஆக்கபூர்வமாக முயற்சி எடுக்கும் அதேசமயம் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகவும் செயல்பட்டு தமிழ்ப்பிரதேச நலன்களையும் பேணிக்கொள்ள வேண்டியவர்களாய் அவர்கள் இருக்கின்றனர்.

அறிவும் ஆற்றலும் அனுபவமும் நிறையப்பெற்ற பலர் இந்த அணியில் இருப்பதால் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகளைச் சாதுர்யத்தோடும், சாணக்கியமாகவும் சாதிப்பார்கள் என்று நம்புவோம்.

## தேர்தல் வன்முறை

## மூவர் கமிஷன் விசாரிக்கும்

கொழும்பு, புதன்

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலை அடுத்து இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து விசாரணை செய்வதற்கென மூவர் கொண்ட கமிஷன் ஒன்றை பிரதமர் திரு. ஜே. ஆர். நியமித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன (தலைவர்) முன்னாள் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா, லங்கா சமசமாஜக்கட்சி பதில் பொதுச் செயலாளர் திரு. பெர்னாட் சோய்சா ஆகிய மூவரும் இக் கமிஷனில் அங்கம் வகிப்பர்.

## உடுவில் கொள்ளை 'ரிட்' மனு

## இன்று விசாரணை

(கொழும்பு)

யாழ். மேயர் துரையப்பா கொலை வழக்குடன் விசாரணைக்கு எடுபட்டு வந்த உடுவில் வங்கிக்கொள்ளை வழக்கை யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரும் 'ரிட்'மனு மீதான விசாரணை இன்றுகாலை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெறும்.

இவ்வழக்கின் சந்தேகநபர்களான பரமேஸ்வரன், விஸ்வஜோதிரத்தினம் ஆகியோர் சார்பில் தாக்கலாகியுள்ள இம்மனு மீதான விசாரணை உயர்நீதிமன்ற நீதியரசர்களான திருவாளர்கள் ரி. டபிள்யூ. ராஜரத்தினம், நோயல் தித்தவெல டி குணசேகரா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும். (இ)

# நவலங்காவின் நாயகன்

# ஜே. ஆர்.

- வி. ஆர். ஸ்ரீநடராஜா -

[ஈழத்து அரசியல் உலகில் ஒன்சுடர் பரவித் திகழ்பவரும், ஈழத்து அரசியல் வரலாற்றிலேயே அதிசயிக்கும் மிகப்பெரும் வெற்றியை கடந்த பொதுத்தேர்தலில் பெற்றவருமான திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதனை அடுத்து, இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் முதலாவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாவதனையொட்டி அவர் பற்றிய இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.]

"ஜே. ஆர்."- ஆம். இன்று மக்கள் இதயங்களில் இரண்டறக் கலந்துவிட்டவர் இவ்விரு எழுத்துக்குரியவர். நீதியும், நியாயமும் மிக்கசுதந்திர தார்மிக ஆட்சி ஒன்றினை உருவாக்க திடசங்கற்பம்பூண்டுள்ள நம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்தன சர்வதேச புகழ்பெற்ற ஒருஅரசியல்வாதியாவார்.


நாற்பது வருடகாலஅரசியல் அனுபவத்தில் நன்கு திளைத்து ஆட்சிமன்றத்தில் அரசாங்க, எதிர்க்கட்சிகளில் பல்வேறு பதவிகள் வகித்த பழுத்த அரசியல் வாதியான திரு. ஜே. ஆரின் றைபடியாத கரங்களில் மக்கள் இன்று ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள்.

### மக்கள் இரட்சகர்

மக்களின் அடிப்படை உரிமைகள்பறிபோகவிருந்தவேளையில் வெற்றிக்காகப் போராடி மக்கள் வாழவேண்டும். அதன் மூலம்தான் தேசம் வளம் பெறும் என்ற உறுதிமிக்க கொள்கையினைக் கைக்கொண்டு நாட்டை அழிவின் விளிம்பிலிருந்துமீட்ட மக்கள் இரட்சகர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன.

### தனித்துவம் விளம்பும் அந்த நாள்

இந்த மக்கள் இரட்சகரின் ஆரம்பகால வரலாற்றை சற்றே பின்நோக்கிப் பார்ப்போமா?



திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன 17-9-1906 காலை 7-23 மணிக்குப் பிறந்தார். இவர் நீதியரசர் திரு ஈ. டபிள்யு.

(6ம் பக்கம் பார்க்க)

[இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாகத் தமிழர்ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்கிறார். தமிழர்விடுதலைக்கூட்டணிச் செயலதிபரும் காங்கேசன்துறைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினருமான திரு அ. அமிர்தலிங்கம் இப்பொறுப்பை, இரண்டாவதுதேசிய அரசுப் பேரவையில் முதலாவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகும்போது ஏற்பதனையொட்டி அவர்பற்றிய இக்கட்டுரை பிரசுரமாகிறது]

# செந்தமிழர் சிந்தையாளும் செம்மல் 'அமிர்'

— காவலூர் ஜயா—சச்சி —

தமிழினத்தின் வரலாற்றில் புதிய சகாப்தமாக, இலங்கையில் சுயநிர்ணய உரிமையுடன் வரையறுக்கப்பட்ட தமிழ் தேசிய இனம் எதிர்க்கட்சியாக வருகின்ற நன்னாள் இன்று.

உலக வரலாற்றில், எதிர்க்கட்சியாக வருபவர்கள், நாளை இந்தநாட்டை ஆளும் இனமாக மாறுவதும்உண்மை. இந்நிலையில் தமிழன் தன்னை ஆளுவதற்கு ஓர் இனமாக எதிர்காலத்தில் அடையும் பக்குவநிலைக்கு எதிர்க்கட்சியாக இருப்பதில் தவறில்லை. எனவே தீர்க்கதரிசனமாக, தமிழர் விடுதலைக்கூட்டணி, அதுவும் அகிலமெங்கும் ஏற்றிப் போற்றும் தலைவனை, எதிர்க்கட்சித் தலைமையை ஏற்கப் பணித்தமை பாராட்டுக்குரியது. இப்பணியை முழுமனத்துடன், திரு. அமிர்தலிங்கம் ஏற்றிருப்பது இளையதலைமுறைக்குத் தெம்பூட்டுகின்றது.


### இளமைப் பருவம்

1927-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 26-ந் திகதி பண்ணாகத்தைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதிகளின் அருமைப் புதல்வராக அவதரித்த இவர், தந்தையைப் போல பொதுத்தொண்டின் சிகரமாக வளர்ந்தார். தமிழினத்தின் இன்னல்களுக்காக, சட்டக்கல்லூரி மாணவனா இருந்தும், மூதறிஞர் செல்வநாயகத்த வழியில், இளையதலைவனாக, கல்லடிக்கும், சொல்லடிக்கும் மத்தியில், இலட்சியப் பற்றால் வளர்ந்து இன்று லட்சோபலட்சம் உள்ளங்களில் நீக்கமறநிறைந்து, இனிய, இணையில்லாத தலைவனாக நிமிர்ந்து நிற்கின்றார்.

### வாழ்வில் இலட்சியத்துணைவி

'அமிர்' விடுதலைவீரனாவதற்கு உறுதுணையாகவாய்த்த இனிய இல்லாள் மங்கையர்க்கரசியென்ற இலட்சியப்பெண்.

இந்த இலட்சியப்பெண் 'அமிரை' மணந்து வாழ்நாள் பூராவும், இனத்தின் நல்வாழ்வுக்குக் களம் அமைத்துக் கொடுத்தார்.



### ஆட்சிமன்றத்துக்குச் சென்றால் மட்டும் சேவையென்பதில்லை

வட்டுக்கோட்டைத்தொகுதியின் மக்கள் மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளித்து, தலைவர் அமிர்தலிங்கத்தை 1970தேர்தலில் தோற்கடித்தாலும், இனவிடுதலைக்காக இதுவரைஎந்தச் சந்ததியும் செய்யாத புதுமையை வரலாற்றில் புகுத்திய பொலிவு நிறைந்த பூரண தலைவன் அமிர்தலிங்கம்.

தமிழினம் கடந்தகாலங்களில் உரிமையற்ற இனமாக, வாழ்ந்தநிலைமாற, ஆண்ட இனம்மீண்டும்ஆள, தமிழ்ஈழ அமைப்பேஉறுதியான தென்ற இலட்சிய நோக்குடன்தான எதிர்க்கட்சிப் பொறுப்பை ஏற்போம்என்று முழங்கும் தலைவர்இவர்.

மறைந்த தலைவர் மூதறிஞர் செல்வா; 'நான் தமிழீழம் காணாமல் மறைந்தாலும், 'அமிரி'ன் காலத்திலாவது தமிழ்ஈழம் மலரும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார். இளையதலைமுறையினர் 'அமிரின்' காலத்தில் தமதுஇலட்சியததை வென்றெடுக்க உறுதியாக நிற்கின்றனர்.

### எதிர்க்கட்சிப்பொறுப்பு

தமிழினத்தைப் பொறுத்தவரையில் இலங்கை ஆட்சியில் எதிர்க்கட்சியாக இயங்காமல் எமது இலட்சியமான இனிய தமிழ்ஈழம்பெறும் இலட்சியப் புனிதப்பணிக்கு பிரசாரமேடையாக மட்டுமே ஆட்சிமன்றத்தைப் பாவிக்கவேண்டும். இவ்வேளையில் சிங்களமக்களின் நன்மதிப்புக்கு உரியவராக எதிர்க்கட்சிப்பொறுப்பில் தமிழர் கூட்டணி இயங்கவேண்டும். இப்பணிக்குமிகப்பொருத்தமும், நடசிந்தனையும், நல்நோக்கும் கொண்ட தலைவர் அமிர்தலிங்கம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை செந்தமிழர் சிந்தையிலும் 'அமிரின்' தலைமையில் தமிழினன் தனித்துவம் பேணப்படும் என்பது திண்ணம்.

# 'மாணவர்களிடம் எம்.ஜி.ஆர். மன்னிப்புக் கோரவேண்டும்'

## தாக்குதல் குறித்து கமிஷன் விசாரணையும் கேட்கிறது மாணவர் குழு

சென்னை, ஆக. 3

மாணவர்கள் மீதான சென்னை பொலிசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்காக தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மாணவர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்'

இவ்வாறு சென்னை அனைத்துக்கல்லூரி மாணவப் பிரதிநிதிகள் குழுவொன்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எம். ஜி. இராமச்சந்திரனை சந்தித்து, மகஜர் ஒன்றின்மூலம் கோரிக்கை விடுத்தது. மாணவர் தாக்குதல் சம்பவத்தை விசாரிக்க விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்கும்படியும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து சென்னை பொலிஸ் கமிஷனரும் மாணவர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும், மாணவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் பழிவாங்கல் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்றும் அம்மாணவர் குழு முதல் அமைச்சரிடம் கொடுத்த மகஜரில் கேட்டுள்ளது. (கெ-இ)

# மலைத் தொடர்கள் மோதும் அபாயம்!

ஆஷாம்பே ஆக.3

மத்திய ஆசியாவிலுள்ள பாமிர் தியான்ஷாங் ஆகிய மலைத் தொடர்கள் ஒன்றையொன்று நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கின்றனவாம்.

ஆண்டுதோறும் ஒரு சென்டிமீட்டர் கதியில் இந்த இரு மலைத் தொடர்கள் இரண்டுப் ஒன்றையொன்றை நோக்கி வளர்ந்து வருகின்றன என விண்கலங்களிலிருந்து எடுக்கப்பட்ட ஆயிரக் கணக்கான ஒலிப்படங்களை ஆதாரங் காட்டி விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

''மலைத்தொடர்கள் இவ்வாறு 'அசைந்து' செல்லுவது நாசத்தை விளைவிக்கக்கூடிய ஒரு நிகழ்வல்ல, ஆனல் மலைகள் அசைவதை ஆராய்வது மிகவும் 'சுவாரஸ்யமானது'' என தாஜிஸ்கிஸ்தான் புவிகர்ப்ப ஆய்வு நிலைய இயக்குநர் 'டாஸ்' நிருபருக்களித்த பேட்டியின்போது கூறினர். (இ)

# கைதி மரணம்;

## மக்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஆக. 3

தமிழ்நாடு நெல்லிக்குப்பம் பொலிஸ் நிலையத்தின்மீது பொதுமக்கள் நடத்திய தாக்குதலை அடுத்து 13 பேர் படுகாயமுற்றனர்.

இவர்களுள் 8 பொலிஸ் கான்ஸ்டபிள்களும் 3 பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர்,

பொலிஸ் நிலையத்தைத் தாக்கியவர்களைக் கலைப்பதற்கு பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனராம்.

திருட்டுக் குற்றம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது மயக்கமடைந்து இறந்ததையடுத்தே பொலிஸ் நிலையத்தை மக்கள் தாக்கத் தொடங்கினர்.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி இறந்தவர் இருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவித்தனர்.

இந்த விளக்கத்தை ஏற்க மறுத்த கூட்டத்தினர் மேலும் தாக்குதலை நடத்தியபோதே கூட்டத்தின்மீது கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்யப்பட்டது. (இ)

# இங்கிலாந்து மீண்டும் வெற்றி

நொட்டிங்காம், ஆக. 3

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நடைபெற்ற 3-வது கிரிக்கட் டெஸ்டிலும் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இரண்டாவது டெஸ்டில் 9 விக்கட்டுகளால் வெற்றி பெற்ற இங்கிலாந்து, 3-வது டெஸ்டில் 7 விக்கட்டுகளால் வெற்றி அடைந்து இந்த 5 டெஸ்ட் தொடரில் 2-0 என்ற நிலையில் உள்ளது. முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 309 ஓட்டங்களையும் பெற்றது. ஆஸ்திரேலிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மக்கோஸ்கர் 107 ஓட்டங்களைப் பெற்ருர்.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 364 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கட் நஷ்டத்திற்கு 189 ஓட்டங்களைப் பெற்றது. ஆஸ்திரேலியாக் கோஷ்டி ஆரம்ப அதிவேகப் பந்துவீச்சு வீரர் வோக்கர் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இங்கிலாந்து வீரர்கள் முதல் இன்னிங்ஸில் அலன் நொட் 137 ஓட்டங்களையும், போய்க்கொட் 107 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் போய்க்கொட் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும்; காப்டன் பியர்லி 81 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். (ஆ)

# நவீல்ட் பாடசாலை ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியா.

கைதடி நவீல்ட் பழைய மாணவர் சங்கத்தின் 10 வது ஆண்டு நிறைவு விழா, பாடசாலை மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

அதிபர் திரு. க. கோபாலகிருஷ்ணன் உறுப்பினரை வரவேற்ருர். வழமைபோல் காலையில் உறுப்பினர்களிடையே கலந்துரையாடல் இடம் பெற்றது. பிற்பகல் 2 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்காண்போர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

திரு கு. சிவபாதம் தலைவர், திரு. க. வைத்தீஸ்வரன் உபதலைவர், திரு வெ. மகேஸ்வரன காரியதரிசி, திரு. அ. பெரியதம்பி பொருளாளர், திரு ந. சர்வானந்தம் உபபொருளாளர். திரு. ஆ. செல்வரத்தினம், திரு. பி ஏ. எம். இஸ்மாயில், திரு. க, இரத்தினேஸ்வரன், திரு. க. சண்முகநாதன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (கா-அ)

# "எரிமலைமுன் புல்லாங்குழல் வாசிக்க வேண்டாம்"

## தமிழக அரசுக்கு திமுக எம்.பி.கோரிக்கை

சென்னை, அக். 3

'புயலில் சாய்ந்த மரங்களாக மாணவர்கள் அடிபட்டுக் கிடக்கின்றனர். அரசாங்கம் எரிமலையின முன்நின்று புல்லாங்குழல் வாசிக்க வேண்டாம்' என தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் சுப்பு மாணவர் தாக்குதல் பற்றி சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கிவிட்டு விசாரணை எதுவுமில்லாமல் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மௌனமாக இருப்பதைக் கண்டித்து சபையில் பல தி. மு. க. உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதேவேளையில் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி மாணவர் தாக்குதல் விசாரணைக் கமிஷனுக்கு வழங்கக்கூடிய தகவல்களைச் சேகரித்துவருகின்ருர். (கெ-இ)

# தந்தை கண்டித்தாராம் மகன் தற்கொலை

மாவிட்டபுரம், புதன்

குடும்பத்தில் பொறுப்பில்லாது திரிந்த 17வயது இளைஞர் ஒருவரைத்தந்தை கண்டித்ததால் மனமுடைந்த அவர் நஞ்சருந்தித்தற்கொலை செய்துகொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த செல்லையா கோபாலகிருஷ்ணன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது திடீர் மரணம் குறித்து விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா, காலமானவருக்கு 14 சகோதரங்கள் உண்டென்றும் அதில் 10பேர் பெண்களென்றும், குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையான காலமானவர் குடும்பத்தில் பொறுப்பில்லாது வேலைதுவுமில்லாது வீணே காலம் கடத்தி வந்ததால் தந்தை அவரைக் கண்டித்தாரென்றும் அதனல் மனமுடைந்து அவர் கிருமிநாசினி அருந்தினரெனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலைஎனத் தீர்ப்புவழங்கினர். சுன்னுகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (அ)

## கண்டி மாவட்டத்திலிருந்து எண்மர்

கண்டி, புதன்

புதிய அரசாங்கத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 3அமைச்சர்களும் 5பிரதி அமைச்சர்களும் இடம்பெற்றுள்ளனர்.

காணி அமைச்சர் திரு. ஈ. எல்.சேனநாயக்கா, தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு.டி. பி.விஜயதுங்கா, வெளிவிகார அமைச்சர் திரு. ஏ. இ.எஸ். ஹமிட் ஆகியோரே 3மந்திரிகளாவர்.

பிரதி அமைச்சர்கள் வருமாறு; திரு.செல்ரன் ரணராஜா (நிதி)திரு. ரி. பி. வரபிட்டிய (பாதுகாப்பு)திரு சந்திர கருணரத்ன (தகவல்ஒலிபரப்பு )திரு. சுனில். எஸ். அபயசுந்தரா (மீன்பிடி) திரு.டபிள்யூ எம். ஜி. திக்கிரிபண்டா(கலாச்சாரப் ) (க-அ)

ஆசிரியருக்குக் கடிதம்:

# யாழ். ஆயுர்கல்லூரியும் புதிய மாணவர் சேர்வும்

இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட சுதேச வைத்தியக் கல்லூரியாகிய யாழ்ப்பாணம லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் கடந்த பல மாதங்களாக யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது. இவ்வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் மட்டும் அரசினரோ அன்றி ஆயுர்வேத திணைக்களத்தினரோ இக் கல்லூரி பிரச்னைகளில் தலையிடவே மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுவிட்டது. இதற்கு அவர்கள் கூறும் கருத்தையும் நாம் ஓரளவு ஏற்கத்தான் வேண்டிஉள்ளது. உண்மையான உண்மையான கல்லூரி நிர்வாகம் எது? யாருடன் கல்லூரி பற்றி தொடர்பு கொள்வது என்ற தடுமாற்றம் இருக்கத்தான் செய்கிறது. அரசினர் ஆயுர்வேத வைத்தியசபையிலும் வழக்குகள் முடிவடையாமல் இக் கல்லூரி பிரச்னையில் அரசு தலையிடக் கூடாது என்ற தீர்மானமும் நிறைவேறி இருப்பதையும் கவனிக்க வேண்டும். இது தொடர்பாக இறுதி ஆண்டுப்பரீட்சை நடைபெற்று ஒரு வருடத்திற்கு மேலாகியும் இன்றுவரை பரீட்சைப்பெறுபேறுகளை ஆயுர்வேத திணைக்களம் வெளியிடவே இல்லை. தற்போதுள்ள இறுதி ஆண்டு மாணவர்களிற்கான பயிற்சிக்காலம் முடிவடைந்துபலமாதமாகியும்இன்று வரை திணைக்களத்தால் இறுதி ஆண்டு பரீட்சை நடத்தப்படவில்லை.

இந்த நிலையில் தற்போது உள்ள தற்காலிக நிர்வாகத் அதிதிருப்தி அந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்லூரியில் நின்று வெளியேறி மூன்ருள் அதிபரும் கல்லூரியின் ஸ்தாபக உறுப்பினருமான டாக்டர் ஆர் ஈ: டபிள்யூ. ஜெகோரெத்தினத்தின் கீழ் பிறிதொருஇடத்தில் கல்வியை மேற்கொண்டுவருகின்றனர்.

இதே வேளை மாணவர் இன்றி வெறிச் சோடிக்கிடக்கும் பழைய கல்லூரியில் புதிய மாணவர்களை எடுப்பதற்கான முயற்சிகள்நடைபெற்றுவருவதை அறியும்போது இக்கல்லூரியின் மாணவர்களாகிய நாம் வேதனை அடையாமல் இருக்கமுடியாது. தற்போதுள்ள பலநூற்றுக்கணக்கான மாணவர்களின் பிரச்னைகளை தீர்க்கமுடியாத புதிய மாணவர்களை சேர்ப்பதனல்பிரச்னைகள் மேலும் சிக்கலடையும் என்பதேஎம்கருத்து.

கே. வி. கே.
திருலோகமூர்த்தி
(தலைவர்)
மாணவர் சங்கம்
யாழ்-லங்கா சித்தஆயுர்வேத வைத்தியக் கல்லூரி

## கடன் தொல்லையால் தற்கொலை

மாவிட்டபுரம், புதன்

கடன் தொல்லைகளால் மனமுடைந்த நபர் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

கீரிமலை கூவிலைச் சேர்ந்த நாகன் காத்தி (45 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் 'கிணறுகள் ஒப்பந்தத்திற்கு எடுத்து வேலைசெய்துவந்த காலமானவர் அதில் பலத்த நஷ்டம் ஏற்பட்டதால் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டதாகத் தெரியவந்தது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்தனர். (அ)

......

## ஐ.தே.க கிளை

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய தேசிய கட்சி கைதடி கிளையை,சாவகச்சேரி தொகுதி ஐ.தே க.அமைப்பாளர் திரு. எம் , எஸ். வி செல்வரத்தினம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

தலைவராக திரு. செ. ஜெயபாலசிங்கமும், உபதலைவராக திரு. தி. இராஜகுலவீரசிங்கமும், செயலாளராக திரு. வ அருட்சோதிநாதனும், உபசெயலாளராக திரு. திசைவீரசிங்கமும், தனதிகாரியாக திரு. தா. முத்துக்குமாரசாமியும் தெரிவு செய்யப்பட்டனர். 9பேர் கமிட்டி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

''தமிழ் வளர்ச்சிக்கு

# ஈழத்தமிழ் முஸ்லிம்இளைஞர்

## ஒன்றுபட்டுழைக்க வேண்டும்''

### சிறுகதை நூல் வெளியீட்டுவிழாவில் உரை

யாழ்ப்பாணம், வியா 'ஈழத்தில் தமிழை வளர்ப்பதற்கு தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். மதத்தால் வேறுபட்டாலும் பேசும்மொழியில் உடன்பிறப்புகளாக ஈழம்வாழ் தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் ஒன்றுபட்டு தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும்'.

மேற்கண்டவாறு யாழ். அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் கலை அமுதன் எம். வி. எம். இக்பாலின் 'ஒருகருவண்டு பறக்கிறது' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் உரையாற்றிய யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த அராலியூர் க. மார்க்கண்டேயர் கூறினார்.

யாழ். சுபாஸ்விடுதி மேல்மாடியில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு எம். சுப்பிரமணியம் தலைமையில் இவ்வெளியீட்டுவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாநில சுகாதார சேவை உதவி அத்தியட்சகர் வைத்தியகலாநிதி பத்மநாதன் கலந்துகொண்டார்.

இவ்விழாவில்யாழ். அரசினர் வைத்தியசாலை வைத்தியஅத்தியட்சகர் வைத்தியகலாநிதி அமரசிங்கமும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்து எழுத்தாளருக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

விழாத்தலைவர் திரு. சுப்பிரமணியம் தமதுரையில் மேல்நாட்டு ஆங்கிலப் பிரபல எழுத்தாளர்கள் கையாண்ட முறைகளை நூலாசிரியர் தமிழில் கையாண்டுள்ளதை வரவேற்றுப் பேசினார்.

ஆய்வுரை நிகழ்த்திய யாழ். வளாகத்தைச் சேர்ந்த துரை மனோகரன் தமதுரையில் ஒரு கருவண்டு பறக்கிறது என்ற இந்த நூல் தமிழ் சிறுகதை அரங்கில் நல்ல இடத்தைப் பெறுமெனவும், இவ்வெழுத்தாளர் கையாண்ட தமிழ் நடை மெச்சத்தக்க முறையில் அமைந்துள்ளதாகவும் கூறினார்.

மௌலவி கே.எம்.எச் சகாப்தீன் தமது சிறப்புரையில் 'இளம் முஸ்லிம் எழுத்தாளராகிய இக்பால் சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை' எனக் கூறினார்.

ஜனாப் எம். ஜி. எம். ஹூசெயின் பேசுகையில் 'முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ். எனவே எங்கள் தாய்மொழியைக் காப்பாற்ற முஸ்லிம்களாகிய நாம், மற்றும் இந்து, கிறீஸ்தவர்களுடன் பின்னிப் பிணைந்து செயலாற்றுவதே சிறந்தது. மதத்தால் வேறுபட்டாலும் பேசும் மொழியால் முஸ்லிம்களும் தமிழர்கள் ஒன்றுபட்டவர்கள் என்பதை யாரும் மறக்கமுடியாது. தமிழைக் காப்பாற்ற முஸ்லிம் எழுத்தாளர் இக்பாலைப்போல முன்வரவேண்டும்' என்று கூறினார். (கா-அ)

'புதிய அரசு

## தமிழ் அஞ்சல் ஊழியர் பிரச்னையை தீர்க்கும்''

### தாய்ச்சங்க செயலாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் ''முன்னைய ஐ. தே. க. அரசாங்கம், தமிழ் ஊழியருக்கு சிங்களத் தகுதி பற்றிய திறைசேரி சுற்றறிக்கையை கொண்டுவந்து நிவாரணம் அளித்ததுபோல, தற்போது பிரதமராகப் பதவி ஏற்றிருக்கும் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன தமிழ் ஊழியருக்கு உத்தியோக மொழி தேர்ச்சியில் உள்ள தடங்கல்களை தீர்ப்பாரென நம்புகிறேன்.'' என்று அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்க யாழ்.கிளையின் 20-வது மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தாய்ச்சங்க செயலாளர் திரு. பேசில் சில்வா குறிப்பிட்டார்.

மாநாட்டிற்கு திரு. இ. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். திரு. சில்வா மேலும் பேசுகையில்: ''இந்த நாட்டில் உள்ள தொழிற் சங்கங்களில் அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கம் மட்டுமே தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் உரிமையை வென்றெடுப்பதில் போராடி வந்திருக்கின்றது. குறிப்பாக சிங்கள ஊழியர்களுக்கு உள்ள சலுகைகளை பெறுவதற்கு தமிழ் ஊழியர்களுக்கு உத்தியோக மொழி தடங்கலாக இருப்பதை அறிகின்றோம். எனவே இப்பிரசனைகளுக்கு தொடர்ந்து போராடுவோம் என்றார்.''

இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. அரசாங்கத்தை வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கோருதல்.

2. முதலாம்தர தபாலதிபர்களுக்கு நியாய அடிப்படையில் மேலதிக ஊதியத்தை மணித்தியாலத்திற்கு 3-20 சதமாக உயர்த்தல்.

3. உத்தியோக மொழி தேர்ச்சியின்மையால் தண்டிக்கப்பட்ட பதவி உயர்வு கொள்கையை நீக்கி பதவி உயர்வு வழங்குக.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்: தலைவர்- எஸ். நல்லைநாதன். உபதலைவர்கள்- செல்வி எஸ். நாகேஸ்வரி, பி. துரைச்சாமி, செயலாளர்-எஸ். அருணகிரிநாதன் உபசெயலாளர்கள்- ஜி. ஜே. அன்ரனி, நிர்வாகசபை உறுப்பினர்களாக பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (கெ-உ)

## ''ஆலய அபிஷேகங்கள் கடவுள் சந்தோஷிப்பதற்கல்ல''

புங்குடுதீவு, புதன் ''கடவுள் வழிபாடு என்பது மனங்களைப் பழக்கவைக்கும் சாதனையாகும். அழுக்ககற்றி ஆன்மீகப்பழுப்பேற்றுவதற்கே ஆலயங்களில் நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றன. கோவில்களில் செய்யப்படும் அர்ச்சனைகள் கடவுளர்களை மகிழவைப்பதற்காக என்று நாம் நினைப்பது தவறு. நம்மைப் பக்குவப்படுத்துவதற்கே ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்கிறோம். ஆண்டவன் நம்மிடம் நியாயங்களை எதிர்பார்க்கிறானே தவிர தனக்கு வரும்படிகளை எதிர்பார்க்கவில்லை''.

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலில் நடைபெற்ற சமயச் சொற்பொழிவின் தொடர் நிகழ்ச்சியில் எட்டாம்நாள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு.சு.குணரெத்தினம் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து கூறியதாவது: ''கடவுள் எப்பொழுதும் உயிர்களுக்கு நன்மைசெய்யவே காத்திருக்கிறார். இதனாலேயே அவர் தெளிவுள்ளவராகவும் காட்சிகொடுக்கிறார். அவருக்குச் செய்யப்படும் அலங்காரங்கள் அவரை தெளிவாளர் என்று காட்டவே செய்யப்படுகின்றன. தேறலின் தெளிவே என்னும் மணிவாசகருடைய கூற்று சிந்தனைக்குரியதாகும். சஞ்சலமில்லாமல் பிறருக்குச் சுகத்தைக் கொடுக்கின்ற சங்கரனே கடவுள் என்று உமாபதிசிவனார் கூறியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

''வாழ்முதலாகிய பொருளாக நாம் கடவுளை நினைத்துக்கொண்டு வாழ்ந்தோமானால் நமக்குள் இருக்கும் துன்பநிலைகள் தூரவிலகிவிடும். நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே என நம்மை கடவுளிடத்தில் பாரம் கொடுத்துவிடவேண்டும்.

''கடவுள் வழிபாட்டின் பெறுபேறுகளை அனுபவித்த காந்திமகான், விவேகானந்தர், யோக சுவாமிகள் முதலியோர்களை நமது முன்னோடிகளாகக் கருதிக்கொள்ளவேண்டும். ஆலயங்களுக்குச் சென்று அர்ச்சனை அபிஷேகம், பூசை முதலியன செய்வதோடு நாம் திருப்தி கொள்ளக்கூடாது. உண்மையான கடவுள் தன்மைகளை நமக்குள் வளர்த்து சமுதாய வாழ்க்கையில் அவற்றினை நடைமுறைப்படுத்த முயலவேண்டும்''. (அ)

மலேஷியன் கைமார்க்
சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

## அரசியல் காரணத்தால் வேலைநீக்கம் செய்தனராம்

### மீண்டும் சேர்க்கக் கோரிக்கை

மாவிட்டபுரம், புதன் குற்றச்சாட்டு எதுவுமின்றி அரசியல் காரணங்களுக்காக வேலைநீக்கம் செய்யப்பட்ட தம்மை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளுமாறு கோரி தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட கி. சச்சிதானந்தம் என்பவர் உணவு கூட்டுறவுத் துறை அமைச்சருக்கும். கூட்டுறவு ஆணையாளருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காங்கேசன்துறைத் தொகுதி அமைப்பாளர் திரு. ரி. பி. முருகையாவைத் தலைவராகக் கொண்ட மேற்படி சங்கத்தில் கணக்குப்பகுதி லிகிதராகச் சேர்ந்த என்னைக் கடந்த 2 வருடங்களுக்கு முன் திடீரென வேலைநீக்கம் செய்தனர். காரணம் கேட்ட சமயம் பின்னர் அறிவிக்கப்படுமெனக் கூறினராயினும் பின்னர் எவ்வித காரணமும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி சங்கத் தலைவர் திரு முருகையா முன்னாள் தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு அளித்த வரவேற்புகள் இராப்போசனங்களில் கலந்துகொள்ளாமல் நான் பின்வாங்கியதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பு வேலைகளில் நான் ஈடுபடாது பின்வாங்கியதும் யாழ். மேயர் துரையப்பாவின் மரணவீட்டுக்குச் செல்லாததுமே எனது வேலைநீக்கத்திற்குக் காரணங்களாகும்.

என்னை வேலைநீக்கம் செய்தது தொடர்பாக நான் யாழ். அரசாங்க அதிபர், கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆகியோருக்குச் செய்த புகாரின்பேரில் அவர்கள் இருதடவை விசாரணைக்காக உத்தியோகத்தரை அனுப்பியபோதும் சங்கம் விசாரணைக்குத் தயாரான நிலையில் இருக்காமையால் விசாரணை நடைபெறவில்லை. வேண்டுமென்றே இவ்வாறு சங்கம் நடந்துகொண்டது. ஆகவே இதுகுறித்து ஒரு விசாரணை நடத்தி என்னை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று அவர் தமது மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## மொழிவழித் தொழிற் சங்கங்கள் பற்றி 'சிவா'

சுண்டிக்குளி, புதன் ''இனரீதியாக தமிழ்த் தொழிலாளர் என்ற முறையில் ஏற்பட்டுள்ள தொழிலாளர்களின் பிரச்னைகளுக்குத் தீர்க்கமான தீர்வுகள் ஏற்படுத்த வேண்டுமானால் மொழிவழித்தொழிற் சங்கங்களின் முழுச்சக்தியும் ஒன்றுசேருவதிலேயே தங்கியுள்ளது. எமது இனத்தின் உரிமைப் போராட்டங்களில் தமிழ் சமூகத்தின் அங்கமான மாணவர்கள், பெண்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள் ஆகியோரின் முழுச்சக்தியும் ஒன்று சேர்ந்து பங்கு கொள்ளுவதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. எமது இனத்தின் வெற்றியில் தான் தமிழ்த்தொழிலாளியின் இனரீதியான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும். சிங்களக் கட்சிகளின் தொழில் சங்கங்களினால் தமிழ்த்தொழிலாளியின் பிரச்னைகளை தீர்க்க முடியாது''.

கடந்த அரசாங்கத்தின் சட்டவிதிகளுக்கு அமைய இதுவரைகாலமும் இயங்கமுடியாமல் இருந்த இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தின் ஆண்டுவிழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நல்லூர் எம் பி திரு. மு. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார். இக் கூட்டம் நேற்று மாலை ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் திரு. வே.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

திரு.சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் ''தமிழ்த் தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய பிரச்னைகளை இந்த நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது சிங்கள அரசாங்கங்கள் ஓரவஞ்சனையாக பாகுபாடு காட்டியே வந்துள்ளனர். சிங்களத் தொழிற் சங்கங்களும் இப்பிரச்னைகளில் தலையிடாமல் மௌனம் சாதித்து வருகின்றன எனவே தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்னைகள் அரசியல் ரீதியாகத்தான் தீர்வுகாணவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே தமிழர் கூட்டணியின் அரசியல் ரீதியான போராட்டங்களுக்குத் தொழிற்சங்கங்களின் பங்கு முக்கியமாகும். பஸ் தொழிலாளர்கள் ஒரு சில பாதுகாப்பைத் தன்னும் பெற வேண்டுமானால் வட, கிழக்கு மாகாணங்களில் தங்களின் அங்கத்தவர் தொகையைக் கூட்டினால்தான் தலைமைப் பீடத்தில் இச்சங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறமுடியும். இதற்கான முயற்சியில் ஒவ்வொரு பஸ் தொழிலாளியும் உழைக்க வேண்டும்'' என குறிப்பிட்டார்.

மற்றும் திரு.மு. ஆலாலசுந்தரம், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம்.பி, திரு. வெ. யோகேஸ்வரன் எம் பி, திரு. ந. சத்தியசீலன், திரு. கந்தசாமி ஆகியோர் உரையாற்றினார்கள். கூட்டமுடிவில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. (அ)

## ஐ. தே. க. வெற்றிக்கு நல்லையில் சண்முகார்ச்சனை

யாழ்ப்பாணம், வியா ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வரவேண்டும் என்று நல்லூர் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையினரின் பிரார்த்தனை பலிதமானதையிட்டு திரு. எஸ் சரவணபவன் தலைமையில் ஆதரவாளர்கள் நல்லூர்க் கந்தசாமி கோவிலில் சண்முகார்ச்சனை செய்வித்தனர்.

இச் சண்முகார்ச்சனையின் பிரசாதங்களை ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடமும் ஏனைய தலைவர்களிடமும் நேரில் கையளிக்கும்பொருட்டு திரு. சரவணபவன் கொழும்புக்கு எடுத்துச் சென்றார்.

இச் சண்முகார்ச்சனையின் போது நல்லூர்த் தொகுதி அமைப்பாளர் திரு. ரி மனோகரனும் கலந்துகொண்டார். (கா-அ)

## சொற்பொழிவும் பண்ணிசையும்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கம் நடாத்தும் குருபூர்ணி விழாவின் 6 வது நாளான இன்று ஆத்மஜோதி நா. முத்தையாவின் சொற்பொழிவும், திரு. வி. சிவஞானசேகரத்தின் பண்ணிசையும், சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். (செ)

## காவலாளிபலி

மாத்தளை, புதன் மாத்தளை பகுதியில் தோட்டக்காவலாளியான ரி. மகாலிங்கம் என்பவர் துப்பாக்கி சூட்டுக்கு பலியானார்.

இச் சம்பவம் தொடர்பாக, தோட்ட மனேஜர், உதவியாளர், மற்றொரு காவலாளி ஆகிய மூவரும் மாத்தளை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

**REGAL** Daily: at 4-45, 7-00 & 9-30 p.m.
(JAFFNA)
Christian Fechner the Creator of the "Crazyboys" now Presents his Most Hilarious Comedy to Date!
PIERRE RICHARD JANE BIRKIN
in
Claudezidis
"THE GOOSE CHASE"
Color

88-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

**RIO** (Jaffna) Now Showing
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ACTION THRILL
in
DARING DOZEN

கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்) 87-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனம் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை
லிடோ போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக
நாளை முதல்: சிவாஜி - மஞ்சுளா நடித்த
சத்யம் (கலர்)

# நவலங்காவின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயவர்த்தனவின் புதல்வர்.

கொழும்பு றோயல் கல்லூரியில் பயின்றுபின்னர்கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியிலும் கல்விகற்றார் சட்டம் பயின்று வழக்கறிஞராக வெளியேறினார்.

1940-ம் ஆண்டு கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்று நகரசபைஉறுப்பினரானார்.

1943ல் களனித்தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டசபைக்குச் சென்றார்.

ஐக்கியதேசியக் கட்சியின் சகல அமைச்சரவைகளிலும் இவர் இடம் பெற்றிருந்தார். நிதியமைச்சராகவும், விவசாய அமைச்சராகவும், ராஜாங்க அமைச்சராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

1970 முதல் 77வரை எதிர்க்கட்சித்தலைவராக இருந்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து 1951ல் ஜெர்மனியைப் போன்று ஜப்பானையும் இரண்டாகக்கூறு போடவேண்டுமென வல்லரசுகள் தீர்மானித்தபோது அத்தீர்மானத்துக்கு எதிராகக் குரலெழுப்பிய ஒரே ஆசியநாட்டவர் என்ற பெயரைப் பெற்றதுடன் அதனைச்சாதனையாக்கி ஜப்பான் மக்கள் அனைவரதும் உள்ளத்தில் அழியா இடம் பெற்றுவிட்ட அற்புத மனிதர் இவர்.

## எதிர்நீச்சல்

இலங்கையில் எந்தவொரு அரசியல்வாதியும் சந்தித்திருக்காத பிரச்னைகளை, நெருக்கடிகளை, எதிர்ப்புகளை திரு. ஜே. ஆர். தம் நீண்டகால அரசியல் வாழ்வில் எதிர்நோக்கினார். இந்த எதிர்ப்புகளையும்,பிரச்னைகளையும் தமது மனோதைரியம், புத்திசாதுரியம், இராஜதந்திரம் முதலியவற்றைப் பயன்படுத்தி சமாளித்து வெற்றி கண்டார். வெற்றிகண்டு அவர் உள்ளம் இறுமாப்புடன் துள்ளிக்குதித்ததாகவோ தோல்வி கண்டு அவர் துவண்டதாகவோ அவரது வரலாறு கூறவில்லை.

## ஐ. தே. க. வளர்ச்சியில் ஜே. ஆர்.

ஐக்கிய தேசியக் கட்சியைக் கட்டியெழுப்புவதில் திரு. ஜே. ஆரின் பங்கு அளப்பரியது. 1956ல் படுதோல்வியடைந்த ஐ. தே. கட்சியை ஒரு சில வருடங்களுக்குள்ளேயே உயிர் பெறச்செய்து அரியாசனம் ஏறச்செய்த பெருமை அவரையே சாரும். அதேபோன்று 1970ல் 18 ஸ்தானங்களை மட்டுமே பெற்ற அக் கட்சியை இன்று இந்த ஏழு ஆண்டுகளுக்குள் 139 ஸ்தானங்களைப் பெற்று உயர்ந்திடச் செய்ததுடன் தமது புரட்சிக்கொள்கைகளால் சுதந்திர, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாபெரும் தலைவர்களையெல்லாம் கவ்வச் செய்தவர்.

## எதையும் தாங்கும் இதயம்

1956ம் ஆண்டு தேர்தல்முடிவுகள் அறிவிக்கப்பட்டு முடிந்த மறுநாள் இவர் செய்த முதல் வேலை கட்சித்தலைமையகமான 'ஸ்ரீகொத்தா'வுக்குச் சென்று கட்சியைப் புனரமைப்புச் செய்து அதற்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதே. திரு. ஜே. ஆரின் எதையும் தாங்கும் இதயத்தை இதுஎடுத்துக்காட்டுவதாகக் கருதப்படுகிறது.

## நாட்டுக்குப் பெருமை தந்தவர்

இன்று ஆசியாவில் உள்ள வளர்முகநாடுகளது அபிவிருத்திக்கு அடிப்படையாக விளங்கும் கொழும்புத் திட்டத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குதாரராக விளங்கியவர் திரு. ஜே. ஆர். இதேபோன்று வேறு பல சர்வதேச திட்டங்களிலும் சர்வதேச மாநாடுகளிலும் அவர் பங்கு பற்றி தமது சொல்லாற்றல் மூலம் நம்நாட்டுக்கு கீர்த்தி தேடித்தந்துள்ளார்.

சட்டத்துறையில் சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்த இவர் தாம் மக்களுக்கு சேவை செய்வதைத் தலையாய கடமையாகக் கொண்டதும் சட்டத் தொழிலுக்கு முழுக்குப்போட்டார். தந்தையின் பெயரால் அல்லது தாயின் பெயரால் புகழ்பெற்று அரசியலுக்கு வந்தவரல்லர் இவர்.

## மக்கள் அனைவரும் சமமே

செல்வமும், செல்வாக்கும் மிக்க நீதியரசர் திரு. ஜெயவர்த்தனவின் புதல்வராகப் பிறந்தபோதிலும், நாட்டின் பிரதமராக இன்று உயர்த்தப்பட்டபோதிலும் ஆடம்பரமும் ஆணவமும் இவரிடம் அறவே கிடையாது. மாளிகையில் வாழும் பணக்காரரும், குடிசையில் வாழும் ஏழைகளும் இவருக்கு சமமே.

## ஜே. ஆரும் டட்லியும்

காலஞ்சென்ற பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவுமாக ஆரம்பகாலத்தில் தேசிய காங்கிரஸில் சேர்ந்தனர். காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா, சேர் பொன்னம்பலம் அருணாசலம் போன்ற பெரும் தலைவர்கள் அங்கம் வகித்த இக்காங்கிரஸில் இவ்விரு இளைஞர்களும் இணைந்த அடுத்த ஆண்டிலேயே அதன் இணைச்காரியதரிசிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கைக்கு 'டொமினியன்' அந்தஸ்து வேண்டுமென திரு டி. எஸ். சேனநாயகா குரலெழுப்பியபோது அவரது கருத்துக்கு மாறாக அவரது தனயனையும் தம் பக்கம் சேர்த்துக்கொண்டு இலங்கைக்கு வேண்டுவது 'டொமினியன்' அந்தஸ்து அல்ல பூரண சுதந்திரமாகும் என்று குரலெழுப்பியவர் திரு. ஜெயவர்த்தன ஆவார்.

சகல சமூகத்தவரையும் சமமாக நடத்துவார் என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ள திரு. ஜே. ஆர். இந்நாட்டின் பிரதமர்கள் வரிசையில் 9 ஆவதாக வந்தாலும் இலங்கை குடியரசானதன் பின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பிரதமராகிறார்.

## ஜே. ஆரின் இலட்சியம்.

தமது இலட்சியம் பற்றி திரு. ஜே. ஆர். பின்வருமாறு கூறுகிறார்:

''நியாயமின்மை, நேர்மை

[6-ம் பக்கம் பார்க்க]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
THE ARENA

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி, சரோஜாதேவி
தாமரை நெஞ்சம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
நாகேஸ்வரராவ்- சாவித்திரி
மஞ்சள்மகிமை

இன்று மட்டும்
சாந்தி யாழ். நகர் போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் சுப தினம்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகிறது. ஒன்று 60 சதம். நாஜக பாலன் ஸ்ரோர், மானிப்பாய். 6765

யாழ். கச்சேரி பாடசாலைகளுக்கும் அருகாமையில் ரக்காறேட், சுண்டிக்குளியில் 2 பரப்புக்குமேல் உள்ள காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: டாக்டர் ஏனஸ்ட் சம்பியன், 33, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. 6759

அளவெட்டி தெற்கில், மல்லாகம் - சங்கானை றோட்டில், சகல தளபாடங்களுடன் நவீன வசதிகள் உள்ள வீடும், வளவும் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. சாந்தா இரத்தின ஜெயா, 'மலர் இல்லம்', அளவெட்டி. 6766

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் யாழ். ஜெட்றிக் களியாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச் சாலையில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு பல சிறந்த பரிசுப் பொருட்கள் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6761

### தேவை

உங்களிடம் சேரும் வேப்பம், இலுப்பம், விதைகளை சுன்னாகம் மத்திய சந்தையில் 23-ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் ''மல்ரிசொப்''பில் கொடுத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மல்ரிசொப், 23, மக்கள் சந்தை, சுன்னாகம். 6763

வார்ப்பு வேலை, லேத்வேலை, சம்மாலைவேலை, வெல்டிங் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில்வரவும். ராதாமெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6758

### இனாம்

சென். பற்றிக்ஸ் களியாட்ட விழா மைதானத்தின் அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் விற்பனையாகிறது [சோயாநின். ஒரு பைக்கட் சோயாநின் வாங்கி — 1 (B) பாய்க்கையும், 1 படத்தையும் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள். 6762

### வாழ்த்து

கொழும்பு,புதன் பல்வைத்திய நிபுணர்கள் சங்கம் பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கும் சுகாதார அமைச்சர் திரு காமினி ஜெயசூரியா, பிரதி அமைச்சர் ஆட்டிக்கல ஆகியோருக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்துள்ளது.

(உ)

ஈழநாடு
EELANADU

## கால் இழந்த யுவதிக்கு புனர்வாழ்வு நிதி

யாழ்ப்பாணம், வியாழன்

சுன்னாகம் ரயில் நிலையத்தில் விபத்துக்குள்ளாகி இரு கால்களையும் வலது கையின் மூன்று விரல்களையும் இழந்த லலிதாதேவி சரவணமுத்து (வயது 16) இப்போது யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த இளம்பெண்ணின் வாழ்க்கையில் ஒளியேற்ற யாழ். லயன்ஸ் கழகம் முன்வந்திருக்கும் அதே நேரத்தில் இந்த யுவதியின் புனர்வாழ்விற்கு இரக்க சிந்தனையுள்ளோரின் பேருதவியும் எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். லயன்ஸ் கழகம் ஆரம்பித்திருக்கும் புனர் வாழ்வு நிதிக்கு உங்களின் பங்கையும் எதிர்பார்க்கிறது.

காசோலைகள் காசு அல்லது தபால் கட்டளைகள் இலங்கை வர்த்தக வங்கி. கணக்கு இல. 3787 செல்வி. லலிதாதேவி சரவணமுத்து நிதி என்ற பெயருக்கு எழுதப்பட்டு. செயலாளர், யாழ். லயன்ஸ் கழகம் 484, ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் என கோரப்படுகின்றது.

## யாழ். வளாக பதில் தலைவர் இந்திரபாலா

யாழ்ப்பாணம், வியா.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தின் பதில் தலைவராக கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா இம்மாதம் முதல் பதவி ஏற்றுள்ளார். இதுவரை காலமும் தலைவராக இருந்த பேராசிரியர் க. கைலாசபதி யாழ். வளாகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகவும், தமிழ்ப் பேராசிரியராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

பேராசிரியர் க. கைலாசபதி' பல்கலைக்கழப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு ஏழுவருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் ஒருவருடகாலக் கல்விலீவில் அமெரிக்கா, இங்கிலாந்து. அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களுக்குச் சென்று ஆக்க இலக்கியம் ஒப்பியல் இலக்கியம் ஆதியன சம்பந்தமான கருத்தரங்குகளில் விரிவுரை ஆற்றவுள்ளார்.

ஒருவருடகால கல்வி லீவை முடித்துக்கொண்டு மீண்டும் திரும்பி யாழ். வளாகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் கலாநிதி கைலாசபதி பதவி ஏற்பார்.

புவியியல் துறைத்தலைவர் கலாநிதி ஆதர் ஜெயசிங்கம் யாழ். வளாக மனிதப்பண்பியற் பீடத் தலைவராக பதவி ஏற்றுள்ளார். இந்து நாகரிகப் பீடத்தலைவர் பேராசிரியர் கே. கைலாசநாதக் குருக்கள் யாழ். வளாகத்தின் ஒரு அங்கமான இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

புவியியல்துறை பேராசிரியராக தற்போது நைஜீரியாவில் இருக்கும் கலாநிதி சோமசுந்தரம் செல்வநாயகம் நியமனம் பெற்றுள்ளார். இவர் விரைவில் நாடு திரும்பி பதவி ஏற்பார் எனத் தெரிகிறது.

பொருளியல் துறை பேராசிரியராக போராசிரியராக பேராதனை வளாக பொருளியல் துறை தலைவர் கலாநிதி எஸ். இராஜரத்தினம் நியமனம் பெற்றுள்ளார். (கு-இ)

## நவலங்காவின்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

யின்மை முதலிய போக்குகளுக்கு என்னிடம் இடம் இல்லை. இந்த ஊழல்களால் இந்நாட்டின் பிரஜைகள் எவருக்காவது அநியாயமோ, அநீதியோ நிகழ நான் இடமளிக்கப் போவதில்லை. மனிதனை உயர்ந்த செல்வமாக மதிப்பவன் நான். அரசியல் வாதிகளான நாம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டியவர்களே. அவர்களது நல்வாழ்வு, அபிலாஷைகள் ஆகியவற்றை மனதிற்கொண்டு நீதியும் நேர்மையும் மிக்க தார்மீக ஆட்சியை இந்நாட்டில் உருவாக்குவேன்''

### எளிமையில் நாட்டம்

பொதுத்தேர்தல் தினத்தன்று கொழும்பு கோட் பிளேஸில் உள்ள தமது இல்லத்தில் இருந்து தமது குடும்பத்தினருடனும் இல்லப்பணியாட்களுடனும் கால்நடையாக வாக்களிப்பு நிலையத்திற்குச்சென்று திரு. ஜே. ஆர். வாக்களித்தது அவர் முற்று முழுதாக எளிமையையே விரும்புகிறார் என்பதனையும் வீணை படாடோபங்களில் அவருக்கு அணுவளவும் நம்பிக்கை இல்லை என்பதனையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. ஆட்சிமன்றத்திற்கு வரும் உறுப்பினர்கள் மது அருந்தியபின் வரக்கூடாது என்று கண்டிப்பாகக்கூறியதோடு அவர்களுக்கான ஒழுக்க நெறி கோவை ஒன்றினையும் வகுத்தது திரு. ஜே. ஆரின் மாண்பினை மேலும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

அன்பும் ஆற்றலும் இன்பமும் சுவையும் உண்மையும் ஊக்கமும் எழிலும் ஏற்றமும் ஐயமின்மையும் ஒழுக்கமும் ஓம்பலும் 'ஒருங்கே அமையப் பெற்ற அவரை மக்கள் தலைவர் என்றுரைப்பதில் தவறென்ன இருக்க முடியும்? நடந்து முடிந்த தேர்தலின்போது இக்கருத்துக்களையே தமது அடிப்படைகளாகக்கொண்டு சூறாவளிப் பிரசாரம் செய்த சாதனை வீரர் இவர்.

திரு. ஜே ஆரின் கருத்துக்கள் தர்க்கரீதியானவை படிப்படியாகக் கருத்துக்களை விளக்கும் இவரது பேச்சு வல்லமை தனித்துவம் மிக்கது. நவலங்காவின் நாயகனை ஜே. ஆர். ஆட்சியில் மக்கள்

## நேற்றிரவு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானது.

இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, இன்று காலை நடைபெறும் தேசிய அரசுப் பேரவையின் சம்பிரதாயபூர்வமான திறப்புவிழாவில் கலந்து கொள்வதென்றும், ஜனாதிபதியின் உரையின் பின்னர் உடனடியாகக்கூடி, அடுத்த நடவடிக்கைபற்றி தீர்மானிப்பதென்றும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைவிட, வேறு எந்தப்பதவியையும் (கமிட்டி அளவில்) ஏற்றுக்கொள்வதில்லை என்றும் முடிவுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று வந்து சேர்ந்த கூட்டணி எம். பி க்களுக்கு கோட்டை ரயில் நிலையத்தில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. (ம)

எல்லா அன்பளிப்புகளுக்கும் யாழ். லயன்ஸ் கழக செயலாளர் உரிய பற்றுச்சீட்டுகள் வழங்குவார்.

இதுவரை உதவி நல்கியவரின் விபரம் வருமாறு:-

1. எஸ். வி. முருகேசு, 154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 900-00 2. ஏழாலை வடக்கு செல்வி. தேவதயாசுந்தையா திரட்டி அனுப்பியது. 419-00

## பேரவை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் சட்டப்படி சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்ய வேண்டியது அவர்களின் முதற் கடமை என்பதனை சபாநாயகர் அவர்களுக்கு நினைவுறுத்துவார் முதலில் செயலதிகாரி சபாநாயகரைக்கொண்டு சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்விப்பார். அதன் பின்னர் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்யவேண்டும்.

இதன் பின்னர் உபசபாநாயகர் ஒருவரையும் குழுக்களின் உபதலைவர் ஒருவரையும் தெரிவு செய்வதற்கு பேரவை முற்படும்.

தேசிய அரசுப் பேரவைக் கூட்டத்தின்போது, மக்கள் கூட்டத்தைச் சமாளிக்கும் பொருட்டு சுமார் 1300 பொலிசார் கடமையில் ஈடுபடுவர்.

அமைச்சர்கள், எம். பிக்கள், தூதுவர்களைக் கொண்டு வரும் கார்கள் கால்பேஸ் ஹோட்டல் பக்கம் இருந்தே வர அனுமதிக்கப்படும்.

பொதுமக்கள் பேரவைக்கு முன்னுள்ள தடுக்கப்பட்ட பகுதிகளுக்குள் இருந்து, நடவடிக்கைகளைக் கண்டுகளிக்க அனுமதிக்கப்படுவர்.

முற்பகல் 10-15 மணிக்கு ஜனாதிபதியின் உரை நிகழ்த்தப்படும்.

சபை நிகழ்ச்சிகள் யாவும் பொதுமக்கள் அறியும் பொருட்டு ஒலிபரப்பப்படும்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கத்தின் தலைமையில் பொலிஸ் கண்காணிப்பு இயங்கும். (உ)

துயர் நீங்கி சந்தோஷ வாழ்வு கிடைக்கும் என்று நம்புவோமாக"

## அறிவித்தல்

### செல்லம்மா

திருமதி செல்லம்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும், யாழ் நீதிமன்ற பதிவாளர் விஸ்வலிங்கம், காரணவாய் மகாவித்தியாலய அதிபர் சுப்பிரமணியம், தனி காசலம் கம்பனி கந்தசாமி, பேராசிரியர் கணேசலிங்கம் (யாழ் வளாகம்) கொழும்பு இளாக்கோ கம்பனி ஜெயபாலசிங்கத்தின் தாயாருமாவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் 3-8-77 புதன் மாலை நவிண்டிலில், கரவெட்டியில் நடந்தேறியது.

6770



வேலர்: எங்கடை சனத்துக்கு நாட்டுப்பற்று துப்பரவாய் கிடையாது.
மயிலர்: ஏன் அப்படிச் சொல்றியள்.
வேலர். மிளகாய் கண்டுக்கு தெளிக்கிற கிருமிநாசினியையும் மிச்சம் விடாமல் குடிச்சிடுதுகள்.
— சுந்தர்

## "வெளியே—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. கூட்டத்தின் முடிவிலேயே சமூகமளித்தனர்.

புதிய பட்ஜட் பற்றித் திரு. மு. கருணாநிதி இன்று பேசுகையில் பட்ஜட்டின் ஒருபுறம் ஜனதா பட்ஜட் மாதிரியும் மறுபுறம் காங்கிரஸ் பட்ஜட் மாதிரியும் இருப்பதாகச் சொன்னார்.

### மகளிர் சார்பின்...

தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது என்று கூறிய திரு. மு. கருணாநிதி ''மஞ்சள் வரியை நீக்க அரசு முன்வரவேண்டும். அல்லாவிட்டால் ''மஞ்சள் வரி போட்ட அரசு இந்த அரசு'' என்று பெண்ணினம் பழிசொல்லும் என்று கூறிவிட்டு தமிழ்நாட்டின் மகளிர் சார்பாக ஆடவனான நான் இந்தக் கோரிக்கையை அரசின் கவனத்துக்கு சமர்ப்பிக்கிறேன்'' என்று சொல்லி முடித்ததும் சபையில் சிரிப்பொலி எழுந்து அது அடங்க சிலநிமிட நேரம் ஆகிவிட்டது!

### வரிச்சலுகை

நிதிஅமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன், சில வரிச்சலுகைகளை இன்று அறிவித்தார். வெல்லத்துக்கு வரிக்குறைப்பு, சிறிய விவசாயிகளிடமிருந்து அறவிடப்படும் மின்சாரக் கட்டணக் குறைப்பு, மூன்றாவது ஊதியக்குழு அமைப்பு பற்றி அறிவித்தபோது சபையின் ஒரு பக்கத்திலிருந்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

நிதிஅமைச்சர் தனது பேச்சின் முடிவில், 'மத்திய அரசுடன் தேவையில்லாமல் மோதுவதை நாம் தவிர்த்துக்கொள்வோம். ஆனால் உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம்' என்று கூறிவிட்டு. 'மத்திய அரசுடன் தமிழகஅரசு முட்டிக் கொள்வதை சிலர் எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர். இவர்களின் முயற்சிகளை நாம் அறிவோம்' என்றும் தெரிவித்தார்.

### முதல்வர் நடவடிக்கை

நெல்லிக்குப்பத்தில் சிதம்பரம் என்பவர் கைதுசெய்யப்பட்டு அடுத்தநாள் மரணமானது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10 பேர் ஒத்திவைப்பு தீர்மானமொன்றைத் தாக்கல் செய்தனர். இதுபற்றி முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கருத்து வெளியிடுகையில், 'அவரின் மரணம் குறித்து பரிசோதனை நடத்திய இரண்டு டாக்டர்களின் அறிக்கைகளும் வேறுவேறு விதமாக இருக்கிறதென்றும், குறிப்பிட்ட கைதியின் மரணம் குறித்து ஒருபொலிஸ் ஊழியர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறினார்.

திரு சாதிக்பாட்சா, 'சிதம்பரம் மரணம் குறித்துவிசாரணை நடத்த 'ரெவினியு' அதிகாரி ஒருவரை அரசு நியமிக்குமா என்று கேட்டபோது, முதலமைச்சர் இக்கோரிக்கையை தாராள மனப்பான்மையுடன் ஏற்றுக்கொண்டார். அப்போது எதிர்க்கட்சி தரப்பிலும் பெரும் திருப்தி நிலவிற்று.

## தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாக விவகாரங்கள் தொடர்பான ஆலோசனைகளையும் பிரதமர் வழங்கியுள்ளதாகத்தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் முடிவை பிரதமர் இப்போது எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிகிறது. (இ)

## கலாயோகி பற்றிய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியாழன்

கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் நூற்றாண்டு நிறைவையொட்டி இன்று வியாழக்கிழமை இரவு 7-50 முதல் 8-00மணிவரை ஆனந்த குமாரசுவாமி, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய பணிகள் பற்றிய சொற்பொழிவு இலங்கை வானொலியில் இடம்பெறும்.

## இன்று

அரியாலை, வியாழன்

யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழா இன்று நடைபெறும்.

இவ்விழாவிற்கு பிரதமஅதிதியாக கொழும்பு அத்தியட்சகர் ஆயர் வண. சிறில் அபயநாயக்கா ஆண்டகை அவர்கள் கலந்துகொள்ளுகிறார்கள்.

திருமதி சிறில் அபயநாயக்கா அவர்கள் பரிசுகள் வழங்குவார்கள்.

## சைப்பிரஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுத்தப்பி ஓடி மீண்டும் வந்து ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

### 40 நாள் தேசிய துக்கம்

இவரின் மரணத்தை ஒட்டி சைப்பிரஸில் 40 நாட்கள் தேசிய துக்கதினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.